நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# 2018

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

தரம் : இடைநிலை - மேற்பிரிவு (ஆண்டு 7, 8)

**Level : Mid Intermediate (Year 7 & 8)**

வழங்கப்படும் நேரம் : 90 நிமிடங்கள்

(வாசிப்பதற்கான நேரம் 10 நிமிடங்கள் உட்பட)

Time Given : 90 Minutes (Including 10 minutes of reading time)

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :

மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.

(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

**June 2018**

**1 முதல் 5 வரையுள்ள வினாக்களுக்கு கோடிட்ட சொற்களைப் பிரித்து எழுதுக (மதிப்பெண்கள் 5 x 1 = 5)**

1. மாணவர்களான நாம் எப்போதும் <u>நற்குணங்களை</u> வளர்த்துக் கொள்ள வேண்டும்
   (a) நற் + குணங்களை (b) நன்மை + குணங்களை
   (c) நல்லக் + குணங்களை (d) நற்க் + குணங்களை

2. <u>ஒழுக்கக்கேடு</u> நம் எதிர்காலத்தையே பாதிக்கும்
   (a) ஒழுக்கக் + கேடு (b) ஒழுக்கம் + கேடு
   (c) ஒழுக்க + கேடு (d) ஒழுக + கேடு

3. உறுதியான நம்பிக்கை <u>இல்லையென்றால்</u> உங்களால் ஒரு தீர்மானத்திற்கு வரமுடியாது
   (a) இல்ல + என்றால் (b) இல்ல + யென்றால்
   (c) இல்லை + என்றால் (d) இல்லை + யென்றால்

4. சில கற்பனைக் கதைகள் <u>உயிரோட்டம்</u> உள்ளதாக இருக்கும்
   (a) உயிர் + ரோட்டம் (b) உயிர் + ஓட்டம்
   (c) உயி + ரோட்டம் (d) உயி + ஓட்டம்

5. <u>பேராசை</u> பெரும் நஷ்டம்
   (a) பேர் + ஆசை (b) பெர் + ஆசை
   (c) பே + ராசை (d) பெரிய + ஆசை

**6 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான ஒத்த கருத்துள்ள சொல்லை தெரிவு செய்க: (மதிப்பெண்கள் 5 x 1 = 5)**

6. தனக்குத்தான் முதல் பரிசு கிடைக்கும் என வருண் திண்ணமாக நம்பினான்.
   இங்கு '**திண்ணமாக**' என்பது
   (a) உறுதியாக (b) மமதையாக
   (c) ஆவலாக (d) மந்தமாக

7. வான்கலம் பேரிரைச்சலுடன் மேலே எழும்பி பறந்தது.
   இங்கு '**பேரிரைச்சல்**' என்பது
   (a) சத்தம் (b) பெருஞ்சத்தம்
   (c) அமைதியாக (d) ஆரவாரமாக

8. கண்ணனின் செயலைக் கண்டு மாலதி வாயடைத்து நின்றாள்.
   இங்கு '**வாயடைத்து**' என்பது
   (a) அழுதுகொண்டு (b) சிரித்துக்கொண்டு
   (c) கைகளால் வாயை மூடிக்கொண்டு (d) ஒன்றும் பேசமுடியாமல்

9. மாமாவும் மாமியும் அல்லும் பகலும் கடுமையாக உழைத்தனர்.
இங்கு '**அல்லும் பகலும்**' என்பது

(a) காலையும் மாலையும் (b) காலையும் பகலும்
(c) இரவும் பகலும் (d) மாலையும் இரவும்

10. காட்டுத்தீயினால் நகர்ப்புறம் புகைமூட்டமாக இருந்தது.
இங்கு '**புகைமூட்டம்**' என்பது

(a) நெருப்பும் புகையும் (b) நெருப்பு இருந்தது
(c) புகை நிரம்பி இருந்தது (d) மேகம் கூட்டமாக இருந்தது

**11 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கு எழுத்துப் பிழையுள்ள சொற்களை தெரிவு செய்து திருத்தி எழுதுக. (மதிப்பெண்கள் 5 x 1 = 5)**

இன்று இளைஙர்கள் பலர் அவர்களுடைய தோற்றத்தைப் பற்றியே யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி யோசிப்பது மோசமான பிரச்சினைகளில் முடியலாம். நாம் அழகாக இருக்கிறோமா இல்லையா என்பது நாம் உண்மையிலேயே எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

ஆனாலும் ஒருவர் தலைக்கனம் பிடித்தவராக, இலட்சிய வெறி உள்ளவராக, நம்பிக்கைத் துரோகியாக இருக்கும் போது அவரை உண்மை இல்லாதவராக, கொளைவெறி பிடித்தவராகவே வர்நிக்கிறார்கள். ஆகவே அழகாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவதில் எந்தத் தவறுமில்லை. ஆனால் தோற்றத்தை விட குணம் தான் மிகவும் முக்கியம். ஆறோக்கியமான உடல் அல்லது அலகைவிட நல்ல குணங்கள்தான் காலப்போக்கில் மற்றவர்களைக் கவரும். ஏனென்றால் நீங்கள் உண்மையிலேயே எப்படிப்பட்டவர், உங்களிடம் என்னென்ன நல்ல குணங்கள் இருக்கின்றன என்பதைத்தான் மற்றவர்கள் ஞாபகம் வைப்பார்கள்.

11) .................... 12) .................... 13) .................... 14) .................... 15) ....................

**16 முதல் 20 வரையுள்ள வினாக்களுக்கு பின்வரும் சொற்களைப்பொருத்துக (மதிப்பெண்கள் 5 x 1 = 5)**

16. வளம் நிறைந்த நாட்டில்

(a) வெள்ளம் பாயும் (b) மக்கள் வாழ்வார்கள்
(c) ஆடிபாடுவர் (d) மிருகங்கள் வாழும்

17. நல்ல நல்ல நூல்கள் உள்ள இடம்
(a) பாடசாலை (b) நூலகம் (c) வைத்தியசாலை (d) இல்லம்

18. மின் விசிறிகளை இயக்குவது
(a) காற்று (b) நீர் (c) மின்சாரம் (d) காற்றாடி

19. தங்க நகைகளை செய்பவர்
(a) நகைக்கடைக்காரர் (b) தச்சன் (c) தட்டார் (d) தங்கக் கடை

20. துணிகளை நெய்பவர்
(a) உழவாளி (b) தையற்காரர (c) நெசவாளி (d) துணிக்கடைக்காரர்

**21 முதல் 24 வரையுள்ள வினாக்களுக்கு பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ஒரே கருத்துள்ள இருவாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் ஒத்த கருத்துள்ள இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்க:**
**(மதிப்பெண்கள் 4 x 2 = 8)**

21. நமக்கு வேண்டியவற்றைத் தந்தை அன்போடு வாங்கிக் கொடுக்கிறார்.

தந்தை அன்போடு ______________________________

22. “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்பது ஒளவையாரின் வாக்குகளில் ஒன்றாகும்.

ஒளவையாரின் வாக்குகளில் ______________________________

23. அறிவியல் வளர்ச்சியால் கண்டுபடிக்கப்பட்ட கருவிகள் பலவற்றை நாம் நாள்தோறும் பயன்படுத்துகிறோம்.

நாம் நாள்தோறும் பயன்படுத்தும் ______________________________

24. மாணவர்கள் ஆசிரியர் சொன்னக் கதையை கேட்டு வியப்படைந்தனர்.

மாணவர்கள் வியப்படையக் காரணம் ______________________________

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து கீழ்வரும் 25 முதல் 29 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடை எழுதுக: (மதிப்பெண்கள் 5 x 3 = 15)**

## Sir C.V. இராமன்

1930ல் இயற்பியல் துறைக்கான முதல் நோபல் பரிசைப் பெற்ற இந்திய அறிவியல் அறிஞர் Sir. சந்திரசேகர வெங்கட இராமன் ஆவார்.

ஒளி ஒரு பொருளின் ஊடே செல்லும்பொழுது சிதறும் ஒளியலைகளில் ஏற்படும் அலைநீள மாற்றத்தை கண்டுபிடித்தார். இப்படி சிதறும் ஒளியின் அலைநீள மாற்றத்திற்கு "இராமன் விளைவு" (Raman Effect) என்று பெயரிடப்பட்டு நோபல் பரிசு அளிக்கப்பட்டது. இக்கண்டுபிடிப்பு இன்று பொருள்களின் பல விதமான பண்புகளைக் கண்டறிய மிகவும் பயனுடையதும் உலகில் புகழ் பெற்றதும் ஆகும்

அறிஞர் Sir C.V. இராமன் இந்தியாவில் தமிழ் நாட்டில் உள்ள திருவானைக்காவல் என்னும் ஊரில் நவம்பர் 7ம் நாள் 1888ல் பிறந்தார். விசாகப்பட்டினத்தில் தனது பள்ளிப்படிப்பை முடித்தார். பின் 1904ல் சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரிகளில் B.A., M.A. பட்டபடிப்புகளில் சாதனை மதிப்பெண்களைப் பெற்று முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். 1907 ஆம் ஆண்டு பிப்ரவரியில் நிதித்துறை தேர்வு எழுதி அதே ஆண்டில் ஜூன் மாதத்தில் கொல்கத்தாவில் உள்ள கணக்குத் துறை தலைமை அலுவலராக தனது வாழ்க்கையைத் தொடங்கினார்.

இவர் ஒரு கணக்காயராக (கணககாளராக) பணிபுரிந்தாலும் கொல்கத்தாவில் உள்ள இந்திய அறிவியல் வளர்ச்சிக்கழகத்தில் ஒளிச்சிதறல் பற்றி செய்முறை ஆய்வுகள் நடத்தி வந்தார். கிட்டத்தட்ட 30 வருடங்களுக்குப் பின் அவராகவே நிறுவிய இராமன் ஆய்வுக்கழகத்தில் இயக்குனராக கடைசி நாட்கள் வரை பணியாற்றினார்.

இந்தியாவில் குடிமக்களுக்கு அவர்களது தேசிய சேவையை பாராட்டி வழங்கப்படும் மிக உயர்ந்த பரிசாகிய "பாரத ரத்னா" விருதை 1954 -ஆம் ஆண்டிலும், அகில உலக "லெனின் அமைதிப் பரிசு" விருதை 1957-ஆம் ஆண்டிலும் பெற்றார். இவர் நவம்பர் 21, 1970-ல் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார் என்றாலும் 'இராமன் விளைவு' என்ற இப்புது அறிவியல் ஒளி விளைவுதான் இவருக்கு நோபல் பரிசு பெறவும் தன் பெயரால் ஓர் அறிவியல் விளைவு பெயர் பெறவும் வழிவகுத்தது.

25. Sir. C.V. இராமன் என்பவர் யார்? எதற்காக எப்போது நோபல் பரிசைப் பெற்றார்?

26. Sir. C.V. இராமன் எங்கு கல்வி கற்றார்? எத்துறையில் பணியாற்றினார்?

27. Sir. C.V. இராமன் பெற்ற விருதுகள் யாவை?

28. இந்தியாவில் "பாரத ரத்னா" விருதை எதற்காக வழங்குகிறார்கள்?

29. Sir. C.V. இராமன் கடைசி நாட்களில் எங்கு பணியாற்றினார்?

**பின்வரும் 30 முதல் 34 வரையிலான வினாக்களில் வேறுபட்ட சொல்லை தெரிவு செய்க:**
**(மதிப்பெண்கள் 5 x 1 = 5)**

30. (a) இசைத்தமிழ் (b) இலக்கணத்தமிழ் (c) இயற்றமிழ் (d) நாடகத்தமிழ்

31. (a) நிலம் (b) நெருப்பு (c) காற்று (d) மேகம்

32. (a) எழுத்து (b) யாப்பு (c) புணர்ச்சி (d) அணி

33. (a) தொல்காப்பியர் (b) விபுலானந்தர் (c) ஔவையார் (d) கணியன் பூங்குன்றனார்

34. (a) எடுத்தல் (b) முகர்தல் (c) பார்த்தால் (d) கேட்டல்

**கீழே கொடுக்கப்பட்டுள்ள அழைப்பிதழை கருத்தூன்றிப் படித்து 35 முதல் 39 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க:**
**(மதிப்பெண்கள் 5 x 1 = 5)**




35. இந்த விழாவின் நோக்கம் என்ன?
   (a) போட்டிகள் நடத்த
   (b) பொங்கல் விழாவை கூடிக் கொண்டாட
   (c) புகைப்படம் எடுக்க
   (d) பரிசுகள் வழங்க

36. இவ்விழாவில் பரிசாகத் தரப்படுவது என்ன?
(a) பொங்கல் சம்பந்தமான கலாச்சார உடை
(b) பெரியவர்களுக்கு சன் டிவி
(c) குடும்பப்புகைப்படம்
(d) கலாச்சார கூட்டுப் பொங்கல்

37. குடும்பத்திற்காக நடத்தப்படும் போட்டி என்ன?
(a) கலாச்சார புகைப்பட போட்டி
(b) கலாச்சார மாறுவேடப் போட்டி
(c) கலாச்சார சூப்பர் சாலன்ஞ் போட்டி
(d) கலாச்சார பரதநாட்டிய போட்டி

38. விசேட ஆண்டு குடும்ப நுழைவு சீட்டின் விலை என்ன?
(a) $20 (b) $150 (c) $10 (d) $30

39. தமிழ்நாடு சமூக மன்றம் நடத்தும் விழாவில் இடம்பெறும் நிகழ்வுகள் யாவை?
(a) கோலமிட்டு, தோரணம் மாவிலை தொங்கவிட்டு, பொங்கல் பொங்குதல்
(b) போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குதல்
(c) பரதநாட்டியம், கோலிவுட் நடனம் மற்றும் பல சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்துதல்
(d) மேலே குறிப்பிட்டுள்ள அனைத்தும் பொருந்தும்

**பின்வரும் 40 முதல் 44 வரையுள்ள வினாக்களுக்கு கோடிட்ட இடங்களுக்குப் பொருத்தமான விடைகளை தெரிவு செய்க: (மதிப்பெண்கள் 5 x 1 = 5)**

புகழ்பெற்ற மூன்று மருத்துவர்கள் நண்பர்களாக இருந்தார்கள். அவர்கள் தங்கள் (40)______ இன்பமாகக் கழிக்க விரும்பினர். அதனால், இயற்கையழகு நிறைந்த ஒரு (41)______ செல்ல முடிவெடுத்தனர். அங்கு சென்றதும் ஒரு மோட்டார் படகை வாடகைக்கு எடுத்து (42)______ பயணம் செய்தார்கள். மூவரும் மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருந்தினர். திடீரென்று, அந்த மோட்டார் படகுக்குள் சிறிது சிறிதாக நீர் வரத் தொடங்கியதும் அவர்கள் பதற்றம் அடைந்தனர். உடனே படகோட்டி படகிலிருந்த ஓட்டையை அடைக்க எவ்வளவோ முயற்சி செய்தார். ஆனால் (43)______ முடியவில்லை, மூவரும் அவருக்கு உதவி செய்தனர். இருந்த போதிலும் அந்த (44)______ முயற்சியும் பலன் அளிக்கவில்லை. இந்த நிலையிலிருந்து எப்படித் தப்புவது என்று யோசித்தனர். நால்வரும் கடலுக்குள் குதித்துக், கரையை நோக்கி நீந்தினர்.

40. (a) பொழுதில் (b) பொழுதை (c) பொழுதின் (d) பொழுதோடு

41. (a) தீவுடைய (b) தீவிலிருந்து (c) தீவிற்கு (d) தீவை

42. (a) கடலுக்கு (b) கடலில் (c) கடலால் (d) கடலின்

43. (a) அவரின் (b) அவருடைய (c) அவரது (d) அவரால்

44. (a) நால்வரின் (b) நால்வரில் (c) நால்வருக்கு (d) நால்வரோடு

**பின்வரும் 45 முதல் 49 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான சொற்றொடர்களைப் பயன்படுத்தி சொற்றொடர்களை நிறைவு செய்க:**
**(மதிப்பெண்கள் 5 x 1 = 5)**

45. செவிடன் காதில் ஊதிய __________ போல
(a) நாதஸ்வரம் (b) ஊது கொம்பு (c) புல்லாங்குழல் (d) சங்கு

46. தன்னைத்தான் காக்கின் சினங்காக்கக் காவாக்கால்
தன்னையே __________ சினம்
(a) வெல்லும் (b) கொல்லும் (c) பழிக்கும் (d) அழிக்கும்

47. மகன் தந்தைக்கு __________ உதவி இவன்தந்தை
எந்நோற்றான் கொல்எனுஞ் சொல்
(a) உபகாரம் (b) ஆற்றும் (c) உதவி (d) கடமை

48. இளமையில் கல்வி __________ எழுத்து
(a) மனதில் (b) புத்தகத்தில் (c) கல்லில் (d) சிலையில்

49. கற்றது __________ கல்லாதது உலகளவு.
(a) கைமண்ணளவு (b) விண்ணளவு (c) கையளவு (d) கடலளவு

**பின்வரும் 50 முதல் 53 வரையுள்ள வினாக்களுக்கு ஆங்கில வாக்கியங்களை தமிழுக்கும், தமிழ் வாக்கியங்களை ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்த்து எழுதுக.**
**(மதிப்பெண்கள் 4 x 2 = 8)**

50. நீ வாங்கியுள்ள மாம்பழங்களை எனக்குக் கொடு

______________________________

51. நான் பயணச்சீட்டை வாங்கும்பொழுது ஒருவன் என் சட்டைப்பையிலிருந்து
பணப்பையைத் தூக்கிச் சென்றுவிட்டான்

______________________________

52. He speaks too fast to be understood

______________________________

53. I cannot tell you that because it is a secret

______________________________

**பேச்சு வழக்கில் உள்ள சொற்களை எழுத்து வழக்கிற்கு மாற்றுக:**
**(மதிப்பெண்கள் 9 x 1 = 9)**

54. (a) இன்டைக்கு (b) காலைல அருவியைக் காண சுற்றுலா பயணிகள் (c) வந்தாங்க. சிலர் மதிய உணவு (d) சாப்பிட்டாங்க, பலர் அருவியில் (e) குளிச்சு மகிழ்ந்தார்கள். மூலிகைகள் கலந்து விழும் அருவி (f) தண்ணியில இயற்கையாக குளிக்காமல், வேதிப்பொருட்களை (இரசாயனப் பொருட்களை) பயன்படுத்துகின்றனர். (g) அங்க (h) வாழ்ர காட்டு விலங்குகள் இயற்கை நீரைக் குடிக்க இயலாத நிலைக்குத் தள்ளப்படுகின்றன. நீர் மாசு அடைய நாங்கள் காரணமாக (j) இருக்கிறம்.

(a) ______ (b) ______ (c) ______ (d) ______ (e) ______

(f) ______ (g) ______ (h) ______ (i) ______ (j) ______

**கட்டுரை எழுதுதல்**

**பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்து 100 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக: (மதிப்பெண்கள் 20)**

55.
நீங்கள் சமீபத்தில் பயணம் சென்று வந்த அனுபவத்தை பற்றி ஒரு கட்டுரை எழுதுக (உ.ம்: அவ்வூரின் சிறப்புகள், சந்தித்த மக்கள், அவர்களின் கலாச்சார பழக்கங்கள் மற்றும் உங்களை கவர்ந்த விடயங்கள் )

(அல்லது)

உனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தால் சமூதாயத்தில் எதையெல்லாம் மாற்ற வேண்டும் என்று ஆசைப்படுகிறாய்? ஏன்?

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2018